புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • அக்டோபர், 09 2025 • புரட்சி 25 • முழக்கம் 40 • விலை ரூ.6.00

## ஆர்.எஸ்.எஸ்–க்கு அரசு மரியாதையா?

நூற்றாண்டு விழா கொண்டாடும் ஆர்.எஸ்.எஸ்-க்கு ஒன்றிய அரசு சார்பில் தபால் தலை மற்றும் நாணயத்தை வெளியிட்டு இருக்கிறார் பிரதமர் மோடி. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் இந்த அவலத்திற்கு சரியான எதிர்வினை ஆற்றி இருக்கிறார். "தேசத் தந்தையைக் கொன்ற மதவாதிகளின் கனவுகளை செயல்படுத்தும் ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு, அரசு கவுரவம் வழங்குவது மிகப்பெரும் அவலம்"என்று முதலமைச்சர் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தம் தான் காந்தியின் உயிரைப் பலி கேட்டது.

● மூன்று முறை தடை செய்யப்பட்ட அமைப்பு ஆர்.எஸ்.எஸ்

● 'சுயம் சேவக்குகளாக'பெண்களை நூறு ஆண்டுகளாக ஏற்க மறுக்கும் அமைப்பு.

● கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மோடி பிரதமராக தொடரக்கூடாது என்று ஆர்.எஸ்.எஸ் தலைமை விரும்பியது. கடவுளின் குழந்தை என்று மோடி தனக்கு தெய்வீக முலாம் பூசிக் கொண்டதை மோகன் பகவத் கடுமையாக எதிர்த்தார். "இனி எங்களுக்கு ஆர்எஸ்எஸ் ஆதரவு தேவையில்லை"என்று பாஜக தலைவர் நட்டா பேட்டி அளித்தார்.

பதவி பறிபோய் விடுமோ என்ற பதட்டத்தில் மோடி முதல் முறையாக நாக்பூர் ஆர்.எஸ்.எஸ் அலுவலகம் போனார். குடியரசு தின விழாவில் ஆர்.எஸ்.எஸ் தேச பக்தி இயக்கம் என்று பெருமை பேசினார். இப்போது அரசு மரியாதை செய்ய முன் வந்திருக்கிறார். தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்துகிறார். ஆர்.எஸ்.எஸ், இப்போது தனது தலைமையகத்தை நாக்பூரில் இருந்து டெல்லிக்கு மாற்றி இருக்கிறது.

● கடந்த ஜனவரி 19-ஆம் தேதி புதிய அலுவலகத்தின் திறப்பு விழாவை "பிரவிஷாட்சேவ்" Praveshotsav"என்ற பெயரில் நடத்தி இருக்கிறது ஆர்.எஸ்.எஸ்.

● ஆர்.எஸ்.எஸ் " கொள்கைத் தந்தை" கோல்வாக்கரின் பிறந்த நாளை இதற்கு தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்.

**கோல்வாக்கர் தந்த கொள்கை என்ன?**

● "கடவுள் புருஷ சுக்தா வழியாக நான்கு வருணங்களை நமக்கு தந்திருக்கிறார். நமது கடவுளின் தலை பிராமணன்; கைகள் அரசன்; தொடையில் வைசியன்; காலில் சூத்திரன் இதுவே நமது இந்துக்களுக்கான கடவுள்" **- ஆதாரம் : Bunch of thoughts' நூல்**

● தலையில் மூளையாக இருக்கும் "பிராமணன்" தான் இந்த சமூகத்தை இயக்கக் கூடியவன் என்பதே இதன் பொருள்.

● மனு தர்மம் தான் இந்துக்களுக்கான சட்டம் என்று கோல்வாக்கரும் சாவர்க்கரும் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்திருக்கிறார்கள் சரி; புதிய அலுவலக திறப்பு விழாவில் என்ன நடந்தது?

● டெல்லியில் புதிய அலுவலக திறப்பு விழாவில் பங்கேற்ற அமித்ஷா, ராஜ்நாத் சிங், ஜே.பி நட்டா பார்வையாளர்கள் வரிசையில் அமர்ந்திருந்தனர். மேடையில் ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் மட்டுமே. அனுமதிக்கப்பட்டனர்.

● **கார்ப்பரேட் கம்பெனிகளின் அலுவலகத்தையும் மிஞ்சி நிற்கிறது ஆர்.எஸ்.எஸ்-ன் ஆடம்பர மாளிகை; 5 லட்சம் சதுர அடியில் 12 அடுக்கு கட்டிடங்கள்; சொகுசு வீடுகள்; கூட்ட அரங்குகள்; மருத்துவ மையம்; கோயில்; 150 கிலோ வாட் சூரிய மின்சார உற்பத்தி நிலையம்; 200 கார்களை நிறுத்தும் வாகன வசதி என 150 கோடி ரூபாய் செலவில் பிரம்மாண்டமாக எழுந்து நிற்கிறது இந்த மாளிகை. இந்த அனைத்து தகவல்களும் வீடியோ காட்சி வழியாக பத்திரிகையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டன. ஆர்.எஸ்.எஸ் என்றாலே எளிமையின் சின்னம் என்ற பிம்பம் இடிந்து நொறுங்கியுள்ளது.**

● "ஆடம்பர மாளிகைக்கு நாம் வந்தாலும் நம்முடைய கொள்கைகள் மாறாது" என்று பேசி இருக்கிறார் மோகன் பகவத்.

"ஆம், உண்மைதான்! இந்த விழா நிகழ்ச்சியில் ஆண்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர்; பெண்களை அவமதிக்கும் கொள்கையை உறுதியாக பின்பற்றி இருக்கிறது ஆர்.எஸ்.எஸ்.

● மற்றொரு முக்கிய செய்தியையும் குறிப்பிட வேண்டும் கடந்த 100 ஆண்டுகளாக ஆர்.எஸ்.எஸ் அமைப்பு எந்த ஒரு சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்படவில்லை; எந்த ஒரு வரி விதிப்பும் இந்த அமைப்பை நெருங்க முடியாது; திரட்டப்படும் நன்கொடைகளை அறிவிக்க வேண்டிய தேவை இல்லை; எந்த ஒரு ஆடிட்டும் சொத்துகளுக்கும் வருமானத்துக்கும் கிடையவே கிடையாது.

● இந்த "பாரதீய தேசபக்த" சேவைக்குத்தான் தபால் தலையும் நாணயமும்!. மக்களைப் பிளவுபடுத்தும் மதவாத ஆபத்திலிருந்துஇந்தியாவைக் காப்போம் என்ற எச்சரிக்கைக் குரலை தமிழ்நாடு முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்.

- விடுதலை இராசேந்திரன்
முகநூல் பதிவு.

## இளைஞர்கள் புடைசூழ நடந்த கோவை பயிலரங்கம்!

கோவை மாவட்டக் கழகச் சார்பில் பெரியாரியல் பயிலரங்கம் 28.09.2025 அன்று கோவை ஆர்.எஸ்.புரத்தில் நடைபெற்றது. பயிலரங்கில் பங்கேற்ற தோழர்களின் அறிமுகத்துடன் நிகழ்வு தொடங்கியது.



பயிலரங்கின் முதல் வகுப்பாக தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, இந்திய வரலாற்றில் பார்ப்பனிய எதிர்ப்பு என்ற தலைப்பில் உரையாற்றினார். அடுத்ததாக கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், திராவிடர் இயக்க வரலாறு என்ற தலைப்பில் உரையாற்றினார்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு பெரியார் தொண்டர் சிற்பி இராசனின் மந்திரமா! தந்திரமா! மூடநம்பிக்கை விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஜாதி ஒழிப்புப் பணியில் திராவிடர் இயக்கம் என்ற தலைப்பில் வரலாற்றுச் சிறப்பிக்க உரையை நிகழ்த்தினார்.

கழகத் தலைவர் முன்னிலையில் கோவையைச் சேர்ந்த மோகன் கிருட்டிணன், வழக்கறிஞர் ஆல்டன், ஹரிஹரன், கவுதம், அஜய், சுதர்சன் ஆகியோர் தங்களைக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்குக் கழகத் தலைவர் கழக வெளியீடுகளை வழங்கி வரவேற்றார்.

பயிலரங்கில் கலந்து கொண்ட பெரும்பான்மை தோழர்கள் இளைஞர்களாகவும், சமூகவலைத்தளங்களின் வாயிலாக பெரியாரையும் அறிந்து கொண்டவர்களாகவும் இருந்தனர். பெரியார் - திராவிடர் இயக்கம் குறித்த அவர்களின் கேள்விகளுக்கு கழகத் தலைவர் பதிலளித்தார்.

பயிற்சி வகுப்பு நடத்திட அலுவலகம் கொடுத்து உதவிய சவுந்தர் அவர்களுக்கும், நிகழ்வை முழுமையாக காணொளிப் பதிவு, படங்கள் எடுத்து கொடுத்த ஸ்டாலின் அவர்களுக்கும் பயிற்சி வகுப்பு நடத்துவதற்கு தகுந்தவாறு அரங்கை சரி செய்து கொடுத்த ஆதரவாளர் பழனி அவர்களுக்கும் நன்கொடை கொடுத்து உதவிய அனைத்து ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.

வெங்கட், நிர்மல் குமார், மாதவன், பன்னீர்செல்வம், ஸ்டாலின், விஷ்ணு, சதீஷ், கதிரவன், நவீன் நிகழச்சிக்கான ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொண்டனர்.

## திருச்சியில் பேரெழுச்சியுடன் நடந்த பெரியார் எனும் பெரும்நெருப்பு









திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் *பெரியார் எனும் பெரும்நெருப்பு என்ற தலைப்பில் கருத்தரங்கம்* 04.10.2025 சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணி அளவில் திருச்சி, அருண் ஹோட்டலில் உள்ள சுமங்கலி அரங்கத்தில் தலைமைக் குழு உறுப்பினர் இரா. உமாபதி* அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வி. சி. க. (திருச்சி மண்டலச் செயலாளர்) அ. க. தமிழாதன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி (திருச்சி மாவட்டச் செயலாளர்) ராயல் ராஜா, தமிழக மக்கள் ஜனநாயக கட்சி (திருச்சி மாவட்டச் செயலாளர்) ராயல் சித்திக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (திருச்சி புறநகர் மாவட்டச் செயலாளர்) செ. ராஜ்குமார், ம. க. இ. க (மாநில பொதுச்செயலாளர்) கோவன், மக்கள் அதிகாரம் (மாநில பொதுச் செயலாளர்) செழியன், த. பெ. தி. க (மாநில கொள்கை பரப்புச் செயலாளர்) சீனி விடுதலை அரசு, அங்குசம் செய்திகள் (பொறுப்பாசிரியர்) பேராசிரியர். நெடுஞ்செழியன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை (திருச்சி மாவட்டச் செயலாளர்) மணிவண்ணன், சாமானிய மக்கள் நல கட்சி (திருச்சி மாவட்டச் செயலாளர்) முகமது. காசிம், நாம் திராவிடர் முன்னேற்றக் கழகம் (பொதுச்செயலாளர்) முபாரக், ஆசிரியர் அரஞ்செழியன், இல. கோவிந்தசாமி, து. மனோகரன், பண்ணன் ஈகவரசன், தேன்மொழி, தி. வி. க. (பெரம்பலூர் மாவட்டச் செயலாளர்) துரை தாமோதரன் ஆகிய தோழர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

பண்ணன் ஈகவரசன், திராவிட மகிழன் ஆகியோர் பெரியார் பற்றிய பாடல்கள் பாடினர். தலைமைக் குழு உறுப்பினர் இரா. உமாபதி, பொன்ராஜ், ஞானவேல் குழுவினரின் நையாண்டி நிகழ்ச்சி நடைபெற்றது. திருச்சி மாவட்டச் செயலாளர் மனோகரன் வரவேற்புரையாற்றினார்.

U2 BRUTUS மைனர் "யார் இந்த ஆண்ட பரம்பரை" என்ற தலைப்பில் ஜாதி ஆதிக்கவாதிகளுக்கு எதிராக பல கருத்துக்களையும், அரசியல் நடிகரால் கரூரில் நடந்த உயிரிழப்பு துயர சம்பவத்தை பற்றியும் மிக விரிவாக கருத்துரையாற்றினார்.

பேரலை இந்திரகுமார் தேரடி "தீ பரவட்டும்" என்ற தலைப்பில் திராவிட இயக்க வரலாறுகளையும், திராவிட இயக்கத் தோழர்கள் தமிழ்நாட்டிற்காக தன்னுயிர் நீத்த தியாகங்கள் பற்றியும் கருத்துரையாற்றினார்.

தி.மு.க மாநில மாணவரணிச் செயலாளர் இராஜீவ் காந்தி "தமிழும் திராவிடமும்" என்ற தலைப்பில் தமிழும் திராவிடமும் தமிழ்நாட்டு மக்களை தலைநிமிரச் செய்து கொண்டிருப்பதை பற்றி கருத்துரையாற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெரியார் மீதான அவதூறுகளைப் பற்றி விளக்கத்தையும், பார்ப்பனரல்லாதவர்களுக்கு வேதசாஸ்திரத்தில் இருக்கும் கட்டுப்பாடுகளைப் போல, பார்ப்பனர்களுக்கும் வேதசாஸ்திரங்களில் போடப்பட்டிருக்கும் கட்டுபாடுகளை பற்றி பார்ப்பனர்களிடம் பேசி அவர்களின் ஆணி வேரில் கைவைத்து மக்களிடம் பார்ப்பனர்களுக்கு எதிராக பரப்புரை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறி நிறைவுரையாற்றினார்.

திருச்சி, திண்டுக்கல், திருப்பூர், சிவகங்கை, தஞ்சாவூர், சென்னை, கடலூர் ஆகிய மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்களும், திமுக, தபெதிக, கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## தேசியப் பாதுகாப்புச் சட்ட வழக்கில் கழகத் தலைவர் விடுதலை

*2009 - ஆம் ஆண்டு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது போடப்பட்ட தேசிய பாதுகாப்பு சட்ட வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். 2009 ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடந்த பொதுக்கூட்டத்தில் ராஜீவ்காந்தி கொலை என்று பேசாதீர்கள், ராஜீவ்காந்தி செய்த தவறுக்காக அவருக்கு கொடுக்கப்பட்ட மரண தண்டனை என்றும், அமைதிப்படையை ஏவி எத்தனை படுகொலைகள் செய்து இருப்பார்; அதற்காக கொடுக்கப்பட்ட மரண தண்டனை அது. விடுதலைப் புலிகள் செய்திருந்தால் பாராட்டுகிறேன்; இல்லையெனில் கண்டிக்கிறேன். ஈழமக்களுக்கான பாதுகாவலர்கள் ஆன விடுதலைப் புலிகளே, நீங்கள் தானே செய்திருக்க வேண்டும். நீங்கள் செய்யாமல் வேறோருவனை ஏன் கொலை செய்ய விட்டீர்கள் என்று விடுதலைப் புலிகளைக் கண்டித்திருப்பேன் என பேசியதாக வழக்கு தொடரப்பட்டது. ஓராண்டுக்கான தேசிய பாதுகாப்பு சட்டமும் பாய்ச்சப்பட்டது. 3 மாதம் சிறையிலிருந்தார். இவ்வழக்கை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடப்பட்டது.*



*இவ்வழக்கு 16 ஆண்டு காலம் கடந்து 29.09.2025 திங்கட்கிழமை திண்டுக்கல் மாவட்டம் இரண்டாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றம் கழகத் தலைவர் கொளத்தூர் மணியை விடுவித்தது. இவ்வழக்கை நடத்தி வழக்கிலிருந்து விடுவித்த வழக்கறிஞர். ஆனந்த் முனிராஜ் அவர்களுக்கு கழகத் தலைவர் நன்றி தெரிவித்தார்.*

## தலையங்கம்

# முதன்மை எதிரியை அடையாளம் காட்டுகிறார் முதலமைச்சர்

திராவிட மாடல் ஆட்சியின் முதன்மை எதிரி யார்? என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடையாளம் காட்டிவிட்டார். மதவாத, சனாதன பாஜகதான் திராவிட மாடல் ஆட்சியின் கொள்கை எதிரி என்று செங்கல்பட்டு திராவிடர் கழகம் நடத்திய சுயமரியாதை நூற்றாண்டு விழாவிலும், தமிழ்நாடு ஆளுநருக்கு அளித்த பதிலிலும் முதலமைச்சர் தெளிவாக விளக்கி இருக்கிறார். அவரது கருத்து மிகவும் முக்கியத்துவமானது.

தமிழ்நாட்டில் பாஜகவும், பாஜகவின் முகமூடிகளும் திமுகவுக்கு எதிராக தேர்தல் களத்தில் நிற்கின்றனர். அஇஅதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஒன்றிய ஆட்சியின் இன துரோகங்களுக்கு குடை பிடிக்கிறார். அக்கட்சியிலிருந்து பிரிந்து நிற்கும் ஓ.பன்னீர் செல்வம், தினகரன் அணியினர் பாஜக அணியில் தங்களை இணைத்துக் கொள்ள மறுப்பதற்காகவே எடப்பாடி பழனிசாமியை எதிர்த்துப் பேசி வருகிறார்கள். பெரியார், அம்பேத்கரை கொள்கைத் தலைவராக கூறிக் கொண்டாலும் நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம் இப்போது பாஜகவை நெருங்கி வருகிறது. அதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இந்த கட்சியைத் தங்களின் வலைக்குள் வீழ்த்த இதுவே சரியான தருணம் என்று பாஜக காய்களை நகர்த்தி வருகிறது, விஜய் தன்னை காப்பாற்றிக் கொள்ள தேசிய கூட்டணிக்கு வரவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ் பார்ப்பன ஊடகவியலாளர்கள் பேசத் தொடங்கி விட்டனர்.

பெரியார் கொள்கைத் தலைவர் என்ற தவெக விஜய் கருத்தை பாஜக தலைமை நம்பத் தயாராக இல்லை. தனது முகத்தை பார்க்க வந்த கூட்டத்தில் 41 பேர் மூச்சுத் திணறி, தண்ணீர் இன்றி மரணத்தைத் தழுவிய கொடுமைக்கு விஜய் வருத்தம்கூட தெரிவிக்கவில்லை. குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும் இல்லை. பனையூர் பதுங்கு மாளிகையில் இருந்து முதலமைச்சருக்கு அவர் சவால் விடுகிறார். கட்சியின் பொதுச்செயலாளராக, முன்வரிசை தலைவர்களாக வலம் வருகிறவர்கள் கைதுக்கு பயந்து தலைமறைவாகி விட்டனர். நேபாளத்தில் நடந்தது போல் ஆயுதப் புரட்சி தொடர வேண்டும் என்று முகநூலில் பதிவிட்ட ஒருவரும் இதில் அடக்கம்.

கரூர் துயரங்களை கட்சி அரசியல், தேர்தல் அரசியலோடு இணைத்தே தமிழ்நாடு அரசியல் களம் அனல் பறக்கிறது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் எடுத்த நிலைப்பாடு மிகவும் தனித்துவமாக இருப்பதை சுட்டிக்காட்ட வேண்டும். “இந்தப் பிரச்சனையில் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவதை விட தமிழ்நாட்டின் எதிர்காலத்தில் இத்தகைய அவலங்கள் நிகழாமல் தடுப்போம்; அரசியல் முரண்பாடுகள், தனிமனித பகைகளை தவிர்த்துவிட்டு மாண்டுபோனது தமிழ் உறவுகள் தான் என்பதே எனது நிலைப்பாடு” என்று முதலமைச்சர் கருத்து தெரிவித்திருக்கிறார். முதலமைச்சர் ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்ற நிலை கடந்து, மக்கள் தலைவராகி விட்டார் என்பதையே முதிர்ச்சியின் உச்சமான இந்த கருத்துகள் உணர்த்துகின்றன.

பார்ப்பனியத்தின் கருத்தியலான சனாதனத்தை உயர்த்திப் பிடிக்கும் ஆளுநர் ரவி, ஜாதி எதிர்ப்பாளராக வேடம்கட்டிக் கொண்டு தமிழ்நாடு அரசைக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சி சனாதனத்தை எதிர்த்தே தொடர்ந்து போராடும் என்று ஆளுநருக்கு பதிலடி தந்துள்ளார்.

தமிழ்நாடு யாருடன் போராடும்? என ஆளுநர் கேட்டுள்ளார்...

★இந்தி மொழியை ஏற்றுக்கொண்டால் தான், கல்வி நிதியைக் கொடுப்போம் என இருக்கும் ஆணவத் திமிருக்கு எதிராகப் போராடும்!

★அறிவியல் மனப்பான்மையை விதைக்கும் கல்வி நிலையங்களுக்குள் சென்று மூடநம்பிக்கைகளையும் - புரட்டுக் கதைகளையும் சொல்லி இளம் தலைமுறையை நூறாண்டு பின்னோக்கி இழுக்கும் சதிக்கு எதிராகட போராடும்!

★உச்சி மண்டை வரை மதவெறியை ஏற்றிக்கொண்டு எதற்கெடுத்தாலும் மதத்தை பிடித்துக் கொண்டு நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தந்திரக் கும்பல்கள் தலையெடுக்காமல் போராடும்!

★ஆர்.எஸ்.எஸ். ஆசியுடன் இந்திய மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து மீண்டும் மனுதர்மத்தை நிலைநாட்டத் துடிக்கும் ஆதிக்க வெறியர்களுக்கு எதிராகப் போராடும்!

★உலகத்துக்கே பொதுவான வள்ளுவருக்குக் காவிக்கறை பூசுவது முதல் கீழடியின் உண்மைகள் நிலத்துக்கடியிலேயே புதைந்துபோக வேண்டும் என்று நினைப்பது வரையிலான வன்மம் இருக்கிறதே. அதற்கு எதிராகப் போராடும்!

★தொகுதிவரையறை மூலம் தமிழ்நாட்டின் வலிமையைக் குறைக்கும் சதிக்கு எதிராகப் போராடும்!

★ஏகலைவனின் கட்டை விரலைக் கேட்பதுபோல் திணித்திருக்கும் நீட் எனும் பலிபீடத்துக்கு எதிராகப் போராடும்!

★நாட்டையே நாசப்படுத்தினாலும், தமிழ்நாடு மட்டும் 11.19% வளர்ச்சி பெற்று இறுதியில் தமிழ்நாடே வெல்லும்! ஒட்டுமொத்த இந்தியாவையும் காக்கும்!.

ஆக திராவிட மாடல் ஆட்சியின் முதன்மை எதிரி பார்ப்பனியமும் சனாதனமும்தான் என்பதை முதலமைச்சர் தெளிவுபடுத்தி விட்டார்.

இந்த நாட்டில் நடக்கும் போராட்டம் எல்லாம் அரசியல் போராட்டம் அல்ல; ஆரிய திராவிடப் போராட்டத்தின் தொடர்ச்சியே என்றார் பெரியார். இந்த போராட்டம் இதுவரை ஒளிவு மறைவாக முகமூடிகளோடு நடந்து கொண்டு இருந்தது. முதலமைச்சருடைய அறிவிப்பு இதை பகிரங்கப்படுத்தி விட்டது. அஇதிமுக, பாஜக, தவெக உள்ளிட்ட கட்சிகளுக்கு எதிரான அரசியலைப் பேசி பார்ப்பனிய, மனுவாத எதிர்ப்பை மடைமாற்றம் செய்து விடக்கூடாது. இக்கட்சிகளை ஆட்டிவைக்கும் பா.ஜ.காவின் பார்ப்பனியமே முதன்மை எதிரி என்ற தெளிவோடு முதலமைச்சர் சரியான பார்வையை முன்வைத்து இருக்கிறார். இதுவே பெரியாரியல் பார்வை.


# பெரியாரை சிறுமைப்படுத்தும் "அறிவுஜீவிகள்"

*பெரியாரிய மார்க்சிய சிந்தனையாளர் எஸ்.வி.ஆர் (எஸ்.வி ராஜதுரை) எழுதிய பெரியார் குறித்த ஆங்கில நூல் ஒன்று அண்மையில் வெளிவந்துள்ளது. “பெரியார்: ஜாதி, தேசம் மற்றும் சோசலிசம்” என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்த ஆங்கில நூல், உரையாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளது. பெரியார் அம்பேத்கர் சிந்தனையாளரான வித்யாபூஷன்ராவத் என்ற ஜாதி எதிர்ப்புப் போராளி எஸ்.வி.ஆர் அவர்களிடம் நிகழ்த்திய உரையாடலின் தொகுப்பே இந்த நூல். கடந்த இதழின் தொடர்ச்சி.......*

தமிழ்நாட்டில் 20 விழுக்காடு தலித் மக்கள் உட்ஜாதிப் பிரிவுகளாக பிரிந்துள்ளனர். உண்மையில் தலித் மக்களின் மேம்பாட்டை விரும்புவோர் இந்த பிரிவினருக்கு இடையே ஒற்றுமையை உருவாக்கி தலித் அல்லாத முற்போக்கு சக்திகளின் ஆதரவைத் திரட்ட வேண்டும். குறிப்பாக தலித் அல்லாத பெரியாரிஸ்ட்,கம்யூனிஸ்டுகளோடு இணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார் எஸ்.வி.ஆர். மாறாக சில தலித் அறிவு ஜீவிகள் பெரியாருக்கு எதிரான கருத்துகளை அச்சு ஊடகங்களின் வழியாக பரப்புகிறார்கள். இந்த போக்கு 1990- களிலேயே தொடங்கிவிட்டது என்கிறார் எஸ்.வி.ஆர்.

பெரியார் எதிர்ப்பில் இவர்கள் தனி நபர்களாகவும் இணைந்தும் பெரியாரை கண்டிக்கிறார்கள். பார்ப்பன ஏடுகளும், பார்ப்பனிய சக்திகளும் இவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுகின்றன. தமிழ்நாட்டு பார்ப்பனர்கள், பாஜக மற்றும் ஆர்.எஸ். எஸ்க்காரர்கள் அம்பேத்கரை விட பெரியாரையே தங்களுக்கு ஆபத்தானவராக கருதுகிறார்கள். பெரியார் “சூத்திரர்களின்” தலைவர், தலித் மக்களுக்கு எதிரானவர் என்று சில தலித் அறிவுஜீவிகள் பெரியாரை சிறுமைப்படுத்துவதை பாஜகவும் ஆர்எஸ்எஸுும் கொண்டாடுகிறது. ‘சூத்திர’ அரசியல் தலைவர்கள் என்றால் லாலுபிரசாத், முலாயம்சிங், மருத்துவர் ராமதாஸ் பெயர்களே நினைவுக்கு வருகின்றன. இவர்கள் குறிப்பிட்ட சூத்திர ஜாதியினருக்காக கட்சி நடத்துபவர்கள். இவர்களைப் போல் பெரியார் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு மட்டும் பிரதிநிதியா? பெரியார் அனைத்து பார்ப்பனரல்லாத மக்களுக்கும் போராடியவர்; சொந்த ஜாதிக்காரர்களாலே வெறுக்கப்பட்ட தலைவர்; பிறகு அவர் எப்படி ‘சூத்திரர்கள்’ தலைவராக இருக்கமுடியும்?

தமிழ்நாடு குடியரசு கட்சியின் தலைவர்கள் சிவராஜ் அவர்களுக்குப் பிறகு வந்தவர்கள் அம்பேத்கரின் தகுதியை குறைத்து அவர் தலித் மக்களுக்கு மட்டுமே உரிய தலைவர் என்ற அடையாளத்தை உருவாக்கி வருகிறார்கள். பெரியாரையும் எதிர்க்கிறார்கள் ஆனால் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் மற்றும் திராவிடர் கழகம் “அம்பேத்கர் தலித் மக்களுக்கான தலைவர் மட்டுமல்ல; அவர் ஜனநாயகக் காவலர்; அனைத்து மக்களுக்குமான தலைவர், பார்ப்பனரல்லாத மக்களின் நண்பர் என்று தலைமேல் தூக்கிக் கொண்டாடின. நான் அம்பேத்கரை தலைவராக ஏற்றுக்கொண்டு விட்டேன்” என்றார் பெரியார். அம்பேத்கரின் கல்வி நிறுவனமான பம்பாய் சித்தார்த் கல்லூரியில் பேசிய பெரியார் (1959, பிப்-25), “உன் அறிவைக் கொண்டு சிந்தித்துப் பார்! அதன் வழி செயல்படு என்று கூறிய தலைவர்கள் இரண்டு பேர் மட்டுமே. 2000 ஆண்டுகளுக்கு முன்பு புத்தர்; அதற்குப் பிறகு அம்பேத்கர் மட்டுமே”. இது அம்பேத்கர் பற்றிய பெரியாரின் மதிப்பீடு. தன்னைவிட ஒரு உயர்வான தலைவர் அம்பேத்கர் என்று அறிவித்தவர் பெரியார்.




இந்தியாவிலேயே சங் பரிவாரங்களை எதிர்த்து நிற்கும் அரசியல் கட்சி விடுதலை சிறுத்தைகள் மட்டுமே!. அதன் தலைவர் தொல்.திருமாவளவன் தனது கட்சிக்குள்ளே சில அறிவுஜிவீகள் பெரியாரை சிறுமைப்படுத்தி எழுத அனுமதித்தது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். தனது கட்சியின் சார்பில் பிற்படுத்தப்பட்ட, இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களை சட்டமன்ற உறுப்பினராக அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய சமூக நீதியை செயல்படுத்திக் காட்டும் பெருமை தொல்.திருமாவளவன் அவர்களுக்கு உண்டு. அவரே அதற்கு நேர் மாறாக அருந்ததியர் உள் ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய போது அவர் எதிர்த்தார். உச்சநீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்தார். தலித் பிரிவினரிடையே மிகவும் அழுத்தப்பட்ட மக்கள் அருந்ததியினர். அவர்களுக்கான தனி இடஒதுக்கீட்டை திருமாவளவன் ஏன் எதிர்க்க வேண்டும். இது எப்படி அனைவரையும் உள்ளடக்கும் சமூகநீதி? கலைஞர் முதல்வராக இருந்த போது இஸ்லாமியர்களுக்கான 3.5 விழுக்காடு தனி இட ஒதுக்கீட்டை பிற்படுத்தப்பட்ட மக்களிடமிருந்து பிரித்து எடுத்துத்தான் தந்தார். பெரியார் எதிர்ப்பு தலித் அறிவுஜீவிகள் ஆதிதிராவிடர் என்ற பெயர் தங்களின் ஜாதிக்கான அடையாளமாக சொந்தம் கொண்டாடுகிறார்கள். 1920-ல் நீதிக்கட்சி தீண்டப்படாத மக்களுக்கு அதுவரை அரசு பதிவேடுகளில் பதியப்பட்ட ‘பஞ்சமர்’ என்ற சொல்லை நீக்கியது. ஆதிதிராவிடர் என்றே குறிப்பிட வேண்டும் என்று ஆணையிட்டது. தொடர்ந்து பிறப்பித்த மற்றொரு அரசு ஆணையில் ”ஆதிதிராவிடர்” என்பது ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு மட்டுமல்ல; சென்னை மாகாணத்தில் அனைத்து தலித் உட்பிரிவுகளுக்கும் பொதுவானது என்று அது தெளிவுபடுத்தியது. இது நீதிக்கட்சியின் நிலை; இதற்கு மாறாக ஜாதியப் பார்வையை முன்வைக்கிறார்கள் சில அறிவுஜீவிகள்.

தலித் அறிவிஜீவிகள் கடந்தகால தலித் தலைவர்களின் வரலாறுகளின் பெருமைகளை பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா, சிவசண்முகம் பிள்ளை, சுவாமி சகஜானந்தா, என். சிவராஜ், மீனாம்பாள் சிவராஜ், சத்தியவாணிமுத்து, கே.பி.எஸ் மணி, என்.இளையபெருமாள் என்று பல தலைவர்கள் உண்டு. அதில் சுவாமி சகஜானந்தாவும், என்.இளையபெருமாளும் காங்கிரஸ்காரர்கள். (அம்பேத்கர் கடைசிவரை கடுமையாக எதிர்த்த கட்சி காங்கிரஸ்). சொல்லப்போனால் அம்பேத்கரை விட உயர்ந்த தலைவர்களாக இவர்களை இந்த அறிவுஜீவிகள் கொண்டாடுகிறார்கள். அதே நேரத்தில் 20-ம் நூற்றாண்டில் மிகச்சிறந்த தலித் தலைவர்களான வீரையன், எல்.குருசாமி பற்றி இவர்கள் அதிகம் பேசுவதோ, எழுதுவதோ கிடையாது. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த வீரையன் மற்றும் எம்.சி.ராஜாவை பெரியார் பெரிதும் மதித்தார். இவர்களில் ஒருவரை அதிகாரம் நிறைந்த ஆளுநர் நிர்வாகக்குழுவில் உறுப்பினராக்க வேண்டும் என்று தீவிரமாக பெரியார் முயற்சித்தார். அமைச்சர் பதவி ஆதிதிராவிடர்களுக்கு வழங்க வேண்டும் என்று தொடர்ந்து போராடினார். 1930-ம் ஆண்டு சென்னை அரசாங்க நிர்வாக சபையில் உறுப்பினர் பதவியில் இருந்த முகமது உஸ்மான் பதவிக்காலம் முடுவுக்கு வந்த போது அந்த இடத்தை எம்.சி. ராஜாவுக்கு வழங்க வேண்டும் என்று ”குடிஅரசு” ஏட்டில் 09.03.1930-ல் பெரியார் எழுதினார். இந்த பதவிக்கு நீதிக்கட்சியிலிருந்து செல்வாக்குமிக்க பலர் போட்டியிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் எம்.சி.ராஜாவுக்குத் தான் அந்த பதவி கிடைத்தது. பெரியார் இரண்டுமுறை இதை வலியுறுத்தி அவர் பெயரை ”குடிஅரசு”பத்திரிகையில் குறிப்பிட்டு எழுதி இருக்கிறார்.

1937-ல் ஆம்பூரில் நடந்த ஆதிதிராவிடர் மநாட்டில் பெரியாரும், எம்.சி.ராஜாவும் பங்கேற்றார்கள். “ஒரு ஆதிதிராவிடர் மந்திரியாக நியமிக்க வேண்டும் என்று பெரியார் 6,7 வருடங்களாக போராடி வருகிறார். பெரியார் முயற்சியே மந்திரி பதவி பெறக் காரணமாக இருந்தது” என்று எம்.சி.ராஜா பேசினார். அதே மேடையில் பேசிய பெரியார் “இந்த புகழ்ச்சிகளுக்கு நான் அருகனல்ல, (தகுதியடையவன் அல்ல) என்று கூறியதோடு உங்கள் அன்புக்கும் தகுதிக்கும் பாத்திரமாக நடந்து கொள்ள ஆசைப்படுகிறேன்” என்றார். எல்.குருசாமி ஒரு தெலுங்கு தலித் தலைவர், ஆனால் அனைத்து தலித் மக்கள் உரிமைக்காக அவர் பேசினார். பெரியார் மீது மிகுந்த மதிப்பு கொண்டிருந்தார். அவர் குறித்து இந்த அறிவுஜீவிகள் கண்டுகொள்வதில்லை என்று எழுதியுள்ளார் எஸ்.வி.ஆர்.

தொடரும்.....

# நாத்திகம் குறித்து தாய்–மகன் உரையாடல்


## கொளத்தூர் நாத்திகர் விழா சிந்தனை-18

*1928 ஆம் ஆண்டு குடிஅரசு இதழில் நாத்திகம் என்னும் தலைப்பில் சித்திரபுத்திரன் எழுதிய நையாண்டி உரையாடலே இந்தக் கட்டுரை. சித்திரபுத்திரன் என்ற புனைப்பெயரில் எழுதியவர் பெரியார். தாயும் மகனும் இதில் உரையாடுகிறார்கள் தந்தை தீவிரமான பெரியார் கொள்கைக்காரர். 'குடிஅரசு' அலுவலகத்திலேயே பணியில் சேர்ந்து விடுகிறார். நாத்திகப் பத்திரிகையான குடிஅரசு பத்திரிக்கைக்கு அப்பா ஏன் வேலைக்குப் போக வேண்டும்? என்று மகன் தாயிடம் கேட்கிறார். மகன் கருத்தை வைத்தே தாய் நாத்திகத்தை மகனுக்கு புரிய வைக்கிறார். இந்த உரையாடலின் முற்பகுதியில் இடம்பெற்றுள்ள தகவல்கள் இவை.*

*இது ஒரு உண்மை சம்பவமாகவே இருக்கும் என்று கருதத் தோன்றுகிறது. உரையாடலை தூயவெழிலழகனார் என்பவர் எழுதி அதை சித்திரபுத்திரன் திருத்தம் செய்துள்ளார் என்று 'குடிஅரசு' குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உரையாடலின் ஒரு பகுதி:*

***தாய்:*** *அப்பா மகனே, சாமி என்றால் என்ன? அதை முதலில் சொல்லு பார்ப்போம், அதாவது அதற்குப் பெயர் என்ன? ரூபம் (உருவம்) என்ன? நிறம் என்ன? குணம் என்ன? அது என்ன சொல்? சற்று புரியும்படி சொல்லு பார்ப்போம். பிறகு, அது உண்டா இல்லையா? என்பதைப் பற்றி பேசலாம்.*

***மகன்:*** *என்ன அம்மா உனக்கு இது கூடவா நான் சொல்லிக் கொடுக்க வேண்டும்? பெயரும் உருவமும் குணமும் தோற்றமும் அற்றவனும், புத்திக்கும் மனத்திற்கும் எட்டாதவனும், எங்கும் வியாபித்து சகல உலகங்களையும் படைத்துக் காக்கும் சர்வ வல்லமையும், சர்வமும் அறியும் சக்தியும் உள்ளவனும், அவனன்றி ஓரணுவும் அசைய முடியாத ஆதிக்கம் கொண்டவனும் ஆகிய ஏக பரம்பொருள் கடவுள். அது ஒரு பெயர்ச்சொல்; இதை நீ அறிந்ததில்லையா? என் தாயே. உன் கேள்வியிலேயே நாஸ்திக வாடை வீசுகின்றதே.*



***தாய்:*** *குழந்தாய்! பொறு பொறு, அவசரப்படாதே. கிளிப் பிள்ளையைப் போல யாரோ சொல்லிக் கொடுத்ததை மனதில் வைத்துக் கொண்டு அர்த்தமில்லாமல் கஷ்டப்படுகின்றாய். 'சாமி' என்றால் என்ன என்று கேட்டேன். அதற்கு ஒரு வண்டி சங்கதி சொல்லி விட்டாய், அவைகளில் ஒவ்வொன்றாக கவனிப்போம் நீ நல்ல பிள்ளை ஆனதினால் கேள்விப் பட்டவைகளையும் மற்றவர்கள் சொல்லிக் கொடுத்ததையும் எதிலாவது படித்ததையும் மறந்துவிட்டதாக நினைத்துக்கொள். குருட்டு நம்பிக்கை முரட்டுப் பிடிவாதம் முதலிய அறிவுக்கு விரோதமான குணங்களை விட்டு விட்டு மாசு மருவற்ற பரிசுத்தமான மனதோடு நான் சொல்வதை சற்றுக் கூர்ந்து கவனமாய்க் கேள்.*

*மகனே! நீ உண்டா இல்லையா என்று என்னைக் கேட்ட சாமி பெயரில்லாதது, உருவமில்லாதது, குணமில்லாதது, ஆனால் எங்கும் வியாபித்து, புத்திக்கும் மனதிற்கும் எட்டாதது என்று முதலில் சொல்லி முடிவில் அது ஒரு பெயர்ச் சொல் என்றும் சொல்லி இருக்கின்றாய். பெயர்ச் சொல் என்றால் நாமமோ, ரூபமோ(உருவமோ), குணமோ இருந்தாக வேண்டும். ரூபம் (உருவம்) வேண்டும், குணமும் வேண்டும். அதுதான் போகட்டுமென்றால், எப்பேர்ப்பட்ட ஒரு தன்மையைப் பற்றியதானாலும் அது மனதிற்காவது புத்திக்காவது எட்டினதாக இருக்க வேண்டும். எனவே "பேர் இல்லை, குணமில்லை. மனதிற்கும், புத்திக்கும் எட்டவும் முடியாது, அப்படி ஒரு வஸ்து இருக்கின்றது, அதை உண்டு என்கிறாயா இல்லை என்கிறாயா?"*

*என்னருமைக் குழந்தாய்! நம்ம வீட்டுப் பெரிய பெட்டிக்குள் ஒரு வஸ்து இருக்கின்றது என்று நான் கூறுகிறேன். அதற்குப் பெயர் இல்லை, ரூபமும் இல்லை, குணமும் இல்லை, அது உன் புத்திக்கும் மனதிற்கும் எட்டாதது. அது இப்போது இருக்கின்றதா? இல்லையா? என்று சொல்லு பார்ப்போம்.*

***மகன்:*** *என்னம்மா இப்படி கேட்கின்றாய்? நீ சொல்லுகின்ற மாதிரி ஒரு சாமான் இருந்திருக்க முடியுமா அம்மா? அப்படியானால் பெட்டிக்குள் ஒன்றுமில்லை என்று தானே அர்த்தமாகின்றது?*

***தாய்:*** *ஏனப்பா அப்படிச் சொல்லுகின்றாய்? பெயரும் உருவமும் இல்லாததாலேயே ஒன்றும் இல்லை என்று சொல்லி விடலாமா? குழந்தாய்! நன்றாய் யோசித்து பதில் சொல்லு.*

***மகன்:*** *பெயரும் உருவமும் இல்லாமல் ஒரு வஸ்து இருக்கக் கூடும் என்று என் புத்திக்கும் படவில்லை. மனதிற்கும் எட்டவில்லையே, எப்படி யம்மா அப்படி ஒரு வஸ்து இருக்க முடியும்?*

***தாய்:*** *உன் புத்திக்கும் உன் மனதிற்கும் எட்டாததினாலேயே ஒரு வஸ்துவை நீ இல்லை என்று சொல்லிவிடலாமா? குழந்தாய்!*

***மகன்:*** *நீ கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டுமானால் நீ சொல்லுகின்ற குணங்கள் கொண்டே ஒரு வஸ்து இருக்க முடியாது என்று தான் சொல்ல வேண்டும், அந்தக் கேள்வியை அர்த்தமற்றதும் (கோபித்துக் கொள்ள வேண்டாம்.) முட்டாள்தனமுமான கேள்வி என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படிச் சொல்வதற்காக தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். அம்மா!*

***தாய்:-*** *மகனே நீ அப்படி கடுமையாக சொல்வதைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷமே; தயவு செய்து இன்னும் ஒரு நூறு தடவை சொல்லு பார்ப்போம். என் காது குளிரட்டும்.*

***மகன்:*** *என்னம்மா ஒருவர் என்னை முட்டாள் என்று சொன்னால் அது உனக்கு மகிழ்ச்சியாய் இருக்கின்றது என்றால் அது எனக்கு அதிசயமாயிருக்கின்றதே?*

***தாய்:*** *இதில் அதிசயம் ஒன்றுமில்லை. நீ என்னயா சொன்னாய்? அந்த மாதிரி கேள்வி கேட்டவர்களைத் தானே சொன்னாய்? அந்த மாதிரி கேள்வி நானா கேட்டேன்? கேட்டவர் களைத்தானே அந்த முட்டாள் பட்டங்கள் போய்ச்சேரும். நான் எதற்காக வருத்தப்படவேண்டும்?*

***மகன்:*** *(சற்று யோசித்துப் பார்த்து) நீ சொல்லுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே, நீ தானே அந்த மாதிரி கேள்வி இப்பொழுது என்னைக் கேட்டாய்?*

***தாய்:*** *மகனே! நன்றாக யோசித்துப் பார். முதலில் நீ அந்த மாதிரி என்னை ஒரு கேள்வி கேட்கவில்லையா?*

***மகன்:*** *என்னம்மா நான் சாமியைப் பற்றிக் கேட்ட கேள்விக்கும் நீ பெட்டியில் இருக்கும் வஸ்து என்பதைப் பற்றி கேட்கும் கேள்வி களுக்கும் வித்தியாசமில்லையா?*

***தாய்:*** *என்ன வித்தியாசம் வேண்டுமென்கிறாய்? நீ கேட்ட வஸ்துக்கு என்ன குணங்கள் கற்பித்து உண்டா இல்லையா' என்று கேட்டாயோ, அதே குணங்களைத் தானே கற்பித்து நானும் ஒரு வஸ்துவைப் பற்றிக் கேட்டேன். நான் கேட்டது முட்டாள்தனமானால் நீ கேட்டது என்ன சொல் பார்ப்போம்? தவிர நீ பெயர் இல்லை என்று சொல்லிவிட்டு பிறகு சாமி என்று முன்னுக்குப் பின் முரண் பேசினாய்: நான் அப்படிச் சொல்லவில்லை. பெயர் இல்லாத வஸ்து என்றேன்.*

***மகன்:*** *என்ன அம்மா இப்படி நீ பேசுகின்றாய்? கேட்ட வஸ்துக்கு, சர்வ சக்தி, சர்வ வல்லமை, சர்வ வியாபகம் படைத்துக் காத்து அழித்தல் ஆகியவைகள் இல்லையா அம்மா?*

***தாய்:*** *மகனே சர்வ சக்தி முதலிய விஷயங்களைப் பற்றியும், படைப்பு காப்பு, அழிப்பு ஆகிய விஷயங்களைப் பற்றியும் பிறகு பார்த்துக் கொள்ளுவோம்.*

*முதலில் அப்படி ஒரு 'வஸ்து'(கடவுள்) இருக்கிறதா என்பதை உறுதி செய்து, பிறகு குணங்கள் பற்றி பேசுவோம்.*

***மகன்:*** *சற்று பொறு அம்மா, நான் போய் வாத்தியாரைக் கேட்டு விட்ட வருகின்றேன்.*

***தாய்:*** *மகனே, நான் முன்னமே சொன்னேன், கிளிப்பிள்ளையைப் போல் வாத்தியார் சொன்னதையே நம்பிக் கொண்டு அவஸ்தைப் படாதே!.போய் கேட்டுவிட்டு வா; எனக்கு ஆட்க்ஷேபணை இல்லை. அவர் உனக்கு இன்னும் என்ன என்ன மூட பக்திகளைப் பற்றி சொல்ல வைப்பாரோ பார்ப்போம். நான் அப்பொழுதே இந்த மாதிரி மூட நம்பிக்கைகளைப் போதிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு நமது பிள்ளைகளை அனுப்பக்கூடாது என்று சொன்னால், உன் தந்தை அதைக் கவனிக்கவில்லை. இருந்தாலும், குற்றமில்லை. போய் உன் வாத்தியாரை நன்றாய்க் கேட்டு தெரிந்து கொண்டு வா. வாத்தியார் புத்திசாலித்தனத்தையும் பார்க்கலாம்.*

***(16.12.1928 குடி அரசு இதழில் வெளிவந்துள்ள உரையாடலின் ஒரு பகுதி)***

# சென்னிமலையில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா!




ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா பேரணி- மற்றும் பொதுக்கூட்டம் சனிக்கிழமை 14.09.2025 அன்று மாலை 6 மணியளவில் சென்னிமலை பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தோழர்கள் கலந்து கொண்ட வாகனப் பேரணி வெள்ளோடு மாரியம்மன் கோவில் திடலில் இருந்து மேளதாளத்துடன் தொடங்கியது.

தலைமைக் குழு உறுப்பினர் காவலாண்டியூர் ஈஸ்வரன் பேரணிக்கு தலைமை வகித்தார். ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி, கரூர் மாவட்டத் தலைவர் மோகன் தாஸ், ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் சென்னிமலை செல்வராசு, திராவிடர் எழுச்சிப் பேரவை மாநிலத் தலைவர் சக்திவேந்தன், சுற்றுச்சூழல் போராளி முகிலன், கழக மாநிலப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.திமுக சென்னிமலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் செங்கோட்டையன் பேரணியை கொடியசைத்து துவங்கி வைத்தார். பேரணி வெள்ளோடு, அனுமன்பள்ளி, அரச்சலூர், தலவுமலை, கே. ஜி. வலசு, கருங்கவுண்டன் வலசு வழியாக பொதுக்கூட்ட மேடையை அடைந்தது. பேரணியின் இடையே அரச்சலூரில் பொல்லான் பேரவைத் தலைவர் வடிவேல் ராமன் பேரணியை வாழ்த்தி வரவேற்று, பேரணியில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர் வழங்கி உபசரித்தார். பேரணியில் இரு சக்கர வாகனங்களில் சுமார் 60 க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.பொதுக்கூட்டத்திற்கு ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் சி. செல்வராசு தலைமையேற்றார்.

பெரியார் பிஞ்சுகள் செங்காந்தள் 'பசுமையும் பாரம்பரியமும்' எனும் தலைப்பில் பேசினார். நிறைமதி 'பசுமையும் பாரம்பரியமும்' எனும் தலைப்பில் பாடல்பாடி, 'சமத்துவமே மகத்துவம்' என்ற தலைப்பில் உரையாற்றினார். இயலருவி பெரியார் பற்றிய பாடல்கள் பாடினார். சிவகிரி அன்பெழில் பெரியார் பற்றி உரையாற்றினார். ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எழிலன், ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் செ. சசிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## சுடுகாட்டுத் தீண்டாமை எதிர்த்து கழகப் போராட்டம்

**சென்னிமலை வடுகபாளையம் கிராமத்தில் தலித் மக்களின் பிணங்களை அடக்கம் செய்ய ஜாதியவாதிகள் தடுத்து வந்தனர். சுடுகாட்டு தீண்டாமைக்கு எதிராக கழகம் 2012 ஆம் ஆண்டு நடத்திய போராட்டத்தில் ஈடுபட்ட 46 பேர் மீது வழக்கு போடப்பட்டது. இவ்வழக்கு நமது அமைப்பின் சார்பாக முன்னெடுக்கப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி உறுதுணையாக நின்று வழக்கை நடத்தியுள்ளார். மக்கள் வழக்கறிஞர் ப.பா மோகன் 7 வருடங்களாக வழக்கை நடத்தியுள்ளார். வழக்குக் கட்டணம் ஏதும் வாங்காமல் விடுதலை பெற்றுத் தந்தார். இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சென்னிமலை பொதுக்கூட்டத்திற்கு வரும் செய்தியறிந்த, 30-க்கும் மேற்பட்ட வடுகபாளையம் பெண்கள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு பயனாடை அணிவித்து நன்றியைத் தெரிவித்தனர். இந்நிகழ்வு காண்போரை நெகிழ்ச்சியடைய வைத்தது.**

தொடர்ச்சி 4-ம் பக்கத்தில்

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கழகத்தினர் எடுத்த பெரியார் பிறந்தநாள் விழாக்கள்

**கள்ளக்குறிச்சி:** மாவட்டக் கழகம் சார்பில் தந்தை பெரியாரின் 147வது பிறந்தநாளை முன்னிட்டு நயனார்பாளையத்தில் தந்தை பெரியார் பள்ளியில் உள்ள பெரியார் சிலைக்கு காலை 10- மணியளவில் ஓய்வு பெற்ற தமிழாசிரியர் ப.அங்கமுத்து தலைமையில் மாலை அணிவித்து பெரியாரின் சிறப்புகள் குறித்து பேசப்பட்டன.

இந்நிகழ்வில் க.அசன், க,மதியழகன், ஆ.நாகராசன், ந.வெற்றிவேல் ச.வீரப்பாண்டியன், ஜெயனுல்லாபுதீன், சேரன், மைக்கேல், அஜித்குமார், தண்டபாணி உள்ளிட்ட பல தோழர்களும் பள்ளி மாணவர்களும் கருப்பாயி, இலட்சுமி, வாசுகி, கோமதி, அஞ்சுகம், சாரதாமணி உள்ளிட பெண் தோழர்களும் கலந்து கொண்டனர்.

சங்கராபுரதில் உள்ள பெரியார் சிலைக்கு காலை 11 மணியளவில் ந.அய்யனார் (தலைமைக் குழு உறுப்பினர்) தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாலை 5 மணி அளவில் கடுவனூரில் பெரியார் அம்பேத்கர் திடலில், பெரியார் பிறந்தநாள் மற்றும் தோழர்கள் பெ. கோவிந்தன் கா.கோவிந்தராஜ் சு.தினகரன் செ.விஜய் ஆகிய தோழர்களின் நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது.






க. இராமர் மாவட்டச் செயலாளர் தலைமை வகித்தார்.

மு.நாகராஜ் வரவேற்புரையாற்றினார், சி.ஆசைத்தம்பி, வீ.முருகன் அறிவியல் மன்ற அமைப்பாளர், இரா.இராமச்சந்திரன், இரா.கார்மேகம் ரிசிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் முன்னிலை வகித்தனர். நா.அய்யனார் தலைமைக் குழு உறுப்பினர் தோழர்களின் படத்தை திறந்துவைத்தார்.

சி.சாமிதுரை மாவட்ட அமைப்பாளர் ந.வெற்றிவேல் மாவட்ட துணைச் செயலாளர் நினைவேந்தல் உரையாற்றினார். மா.குமார் ரிசிவந்தியம் ஒன்றிய தலைவர் நன்றி உரையாற்றினார். கு. பாபா தமிழ்நாடு மாணவர் அணி, ஜீவா, நீதிபதி, கி.ஆனந்தன், மு.குமரேசன், ஏ.ஜெயபிரகாஷ் சா.ஏதுசாமி, கா. கயல், தமிழ்தாசன் துறை, வி.தனுஷ் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர். நினைவேந்தல் தோழர்களின், படத்தை குடும்பத்தாருக்கு ந.அய்யனார் தலைமைக் குழு உறுப்பினர் வழங்கினார்.

தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவாக ஞாயிறு (22-09-2025)அன்று நயனார்பாளையம் அருகில் உள்ள வி.மாமாந்தூர் கிராமத்தில் புதிய தோழர்களான தங்கம், கருப்பாயி, இலட்சுமி தோழர்களின் ஏற்பாட்டில் தெருமுனைக் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் ஆத்தூர் மகேந்திரன் மற்றும் கணபதி தோழர்களின் விழிப்புணர்வு கருத்துரையாடல் நடத்தப்பட்டது. ந.வெற்றிவேல், ஆ.நாகராசன், க.மதியழகன், ஆசிரியர் முருகானந்தம், மைக்கேல்.வி.சி.க, அம்பிகாபதி.வி.சி.க, பாலு.வி.சி.க உள்ளிட தோழர்கள் உரையாற்றினார்கள்.

**திருப்பூர்:** மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 17 -09 - 25 அன்று காலை 9-30 மணி அளவில் தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.



பெரியார் சிலைக்கு கழகப் பொருளாளர் சு.துரைசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கனல் மதி கொள்கை முழக்கங்களை கூற தோழர்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர்.

சிவகாமி ஜாதி ஒழிப்பு உறுதி மொழியினை கூற தொடந்து தோழர்கள் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். முகில் இராசு முன்னிலை வகித்தார். பாரதி சுப்பராயன் (நவீன மனிதர்கள் குழு தலைவர்), தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி ஆகியோர் கருத்துரையாற்றினர்.

கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், தெற்கு பகுதி பொறுப்பாளர் இராமசாமி, மாநகர துணைத் தலைவர் மாரிமுத்து, மாநகரச் செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர்கள் சரசுவதி, முத்து வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், தனகோபால், ஆத்துப்பாளையம் மதன், நவீன மனிதர்கள் குழு லெனின், அருன், காதர் தோழர்கள்: அம்மா காளியம்மாள், சிரிஜா, வசந்தி யமுனா, இனியன், ஹரிசு, சங்கவி, ரூப, கார்திக், கருணா நீதி இராஜ்குமார், கணபதி பெரியார் பிஞ்சு: தழல் சிறகன், வெற்றி மாறன், மகிழ்மாறன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**சென்னை:** சிம்சனில் உள்ள பெரியார் சிலைக்கு, மாவட்டக் கழகம் சார்பில், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில், கழக







தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் இராவணன், அ.வ. வேலு. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.அருண் உள்ளிட்ட பல உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்று கொள்கை முழக்கமிட்டு, சமூகநீதி நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

காலை 7 மணிக்கு, நங்கநல்லூர் பகுதிக் கழகத்தின் சார்பில், நங்கநல்லூரில் உள்ள 2 பெரியார் சிலைகளுக்கும் - அண்ணா சிலைக்கும் மாலை அணிவித்து, தோழர்கள் கொள்கை முழக்கமிட்டு, சமூகநீதி உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வை திவிக தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன் ஒருங்கிணைத்தார்.

நகர அமைப்பாளர் அருண் கோமதி, பிரீத்தி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்று, பெரியாரின் பிறந்தநாளை கொள்கைநாளாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். வேளச்சேரியைச் சேர்ந்த குருபிரசாத் என்ற இளைஞர் இயக்கத்தில் இணைந்து கொண்டார்.

## சட்டப் பல்கலைக்கழகத்தில் சமூகநீதி நாள் உரையாடல்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில் பேரன்பு ஒருங்கிணைப்பில் தந்தை பெரியாரின் 147-வது பிறந்தநாள் "சமூகநீதி நாளை" முன்னிட்டு 17.09.25 அன்று தந்தை பெரியாரின் உருவப் படம் வைத்து பெரியாரின் சமூகநீதி, பெண்விடுதலை கொள்கைகளை பற்றி மாணவருடன் உரையாடல் நடைபெற்றது.



மாணவர்கள் பெரியாரின் கொள்கைகளை முழக்கமிட்டும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இனிப்பு வழங்கியும் தந்தை பெரியாரின் பிறந்தநாளை கொண்டாடியதோடு நிறைவாக சமூகநீதி நாள் உறுதிமொழியும் எடுத்துக்கொண்டனர்.

## வாசகர் கடிதம்

குடிஅரசு வெளியிட ஏற்பட்ட தடைகள் குறித்த கழகத் தலைவரின் உரை பல புதிய தகவல்களை அறிந்து கொள்ள உதவியது. குடிஅரசு தொகுப்பில் உள்ள பல தோழர்களின் கூட்டு உழைப்பு தற்போதைய இளைஞர்களுக்கு ஒரு பாடமாக அமைகிறது. பேராசிரியர் வீ.அரசு அவர்களின் உரை ஈழப் பிரச்சனையிலும், வீரப்பன் பிரச்சனையிலும் கழகத் தலைவரின் தியாகத்தை பறைசாற்றும் வகையில் அமைந்தது.

மேலும் குடிஅரசு தொகுப்பை வெளியிட ஏற்படும் பொருளாதார செலவை சமாளிக்க தன் வீட்டையே தர முன்வந்த கழகப் பொதுச் செயலாளரின் குணம் சிலிர்க்க வைக்கிறது. குடிஅரசை தொகுக்க ஏற்பட்ட சிரமங்கள் புரட்சிப் பெரியார் முழக்கம் உரிய முறையில் ஆவணப்படுத்தி சேமித்து வைக்கப்பட வேண்டிய அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது.

குடிஅரசுத் தொகுப்பு குறித்த பல்வேறு செய்திகளை அனைவரும் தெரிந்து கொள்ளக் காரணமாக இருந்த சீர் வாசகர் வட்டத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

-அருண் கோமதி (தாம்பரம் பகுதி அமைப்பாளர்

## கழக ஏட்டுக்கு நன்கொடை

ஆசிரியர்கள் சிவகாமி, சிவக்குமார் முயற்சியில் ஆதரவாளர்கள் மற்றும் கழகத் தோழர்களை ஒருங்கிணைந்து வாட்ஸ்அப் குழு வழியாக புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு மாதம் ரூ. 500 என நன்கொடை திரட்டி வருகின்றனர். ஓராண்டு செயல்திட்டமாக இதை செயல்படுத்தி வருகின்றனர். செப்டம்பர் மாத நன்கொடையாக ரூ.15000 வழங்கியுள்ளனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்).

3ம் பக்கம் தொடர்ச்சி..

சிறப்பு விருந்தினர்களாக, திமுக ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர், மாநிலக் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் வி.சி சந்திரகுமார், சென்னிமலை ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ மற்றும் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டனர். சமூக நீதி மக்கள் கட்சித் தலைவர் வடிவேல் ராமன், திராவிடர் எழுச்சிப் பேரவைத் தலைவர் சு. சக்திவேந்தன், தற்சார்பு விவசாயிகள் சங்கம் கி. வே. பொன்னையன், திமுக இளஞ்செழியன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

U2 BRUTUS சத்யா கலைத்துறையில் "திராவிட இயக்க புரட்சி" என்ற தலைப்பில் தமிழ் சினிமாத் துறையில் சமூக நீதி மற்றும் சமத்துவம் பற்றி காட்சிகள் வெளிவந்ததை பற்றி உரையாற்றினார். ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர், திமுக மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி சந்திரகுமார் திராவிட இயக்கம் வளர்த்த சமூகநீதி என்ற தலைப்பில் பெரியார் செய்ய நினைத்ததை, அண்ணா அவர்கள் சட்டமாக நிறைவேற்றியதையும், கலைஞர் அவர்கள் அச்சட்டங்களை செயல்படுத்தியதையும், முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு செயல்பாடுகளை செயல்படுத்திக் கொண்டிருப்பதைப் பற்றி உரையாற்றினார். U2 BRUTUS மைனர் "திராவிடமும் தமிழ் தேசியமும்" என்ற தலைப்பில் தமிழ் தேசியம் என்று சொல்லி திரியும் போலி தமிழ்தேசிய வாதிகளையும், ஆர்.எஸ்.எஸ் பார்ப்பன கும்பல் பல்வேறு கோணங்களில் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவ நினைப்பதைப் பற்றியும் சிறப்பாக உரையாற்றினார்.

பேரலை இந்திரகுமார் தேரடி "நீதிக்கட்சி முதல் திராவிடர் இயக்கம் வரை" என்ற தலைப்பில் பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளையும், கலர், கலர்களாக கயிறுகளைக் கட்டித் திரியும் ஜாதியவாதிகளின் நிலைமையும், கலர் போன கயிற்றை மாட்டித் திரியும் பார்ப்பனர்களின் நிலைமை பற்றியும் உரையாற்றினார். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

மாநில அமைப்புச் செயலாளர் தோழர் ப. இரத்தினசாமி நன்றியுரையாற்றினார். புரட்சிகர இளைஞர் முன்னணி அ.செல்வராசு, சிபிஎம் தாலுகா கமிட்டி உறுப்பினர் ம. ராமசாமி, சிபிஅய் மாவட்டக் குழு உறுப்பினர் பொன்னுசாமி, விசிக சட்டமன்ற தொகுதி துணைச் செயலாளர் இளஞ்சுடர் ஈஸ்வரன், சென்னிமலை ஒன்றியச் செயலாளர் ஆதித்தமிழர் பேரவை பழனிச்சாமி மற்றும் கழகத் தோழர்கள் திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, கோவை மாநகரத் தலைவர் நிர்மல், செல்லப்பன், கிருஷ்ணமூர்த்தி, ப. குமார், திருமுருகன், பழனிச்சாமி, மணிமேகலை, கிருஷ்ணன், நல்லதம்பி, கோபிநாத், பிரபு, இசைக்கதிர், விஜயரத்தினம், சுரேஷ், கிருத்திகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : October 10, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran